பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**15 07 2026** **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** இங்கிலாந்து உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது வரலாற்று சிறப்புமிக்கது என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

**2.** உத்தரப்பிரதேசத்தில் ஆறுவழி பசுமைச்சாலைத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**3.** அறிவியல் ஆராய்ச்சியின் பலன்கள் விவசாயிகளிடம் நேரடியாக சென்றடைவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**4.** இந்தியா — பெல்ஜியம் இடையேயான பேச்சுக்கள் இன்று **Brussels**-ல் நடைபெற்றன.

**5.** **Budapest** சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Aman** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>

இங்கிலாந்து உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது வரலாற்று சிறப்புமிக்கது என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தக உறவை வலுப்படுத்த இது உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு துறைகளில் புதிய வாய்ப்புகளை இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தித் தந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தியா — இங்கிலாந்து இடையேயான நல்லுறவில் இந்த ஒப்பந்தம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது புதிய அத்தியாயத்தின் தொடக்கம் என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, இந்த ஒப்பந்தம் இங்கிலாந்து உடனான வர்த்தக உறவை மேலும் வலுப்படுத்த உதவிடும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த ஒப்பந்தம் செயல்பாட்டுக்கு வந்துள்ளதன் மூலம், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் 99 சதவீத பொருட்களுக்கு வரி விலக்கு சலுகை கிடைக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், ஜவுளி, உணவுப்பதப்படுத்துதல் மற்றும் மருந்து உற்பத்தி துறைகள் பயன்பெறும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சிறு-குறு தொழில்துறையின் வளர்ச்சிக்கும் இது உத்வேகம் அளிக்கும் என்று திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஏற்றுமதியாளர்களுக்கு எண்ணற்ற வாய்ப்புகளை இந்த ஒப்பந்தம் உறுதி செய்துள்ளதாக மூத்த பத்திரிகையாளர் வெங்கடேஷ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte — வெங்கடேஷ் - 41 Sec. )*

<<<<<<<>>>>>

உத்தரப்பிரதேசத்தில் ஆறுவழி பசுமைச்சாலைத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், 14 ஆயிரத்து 400 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்தார்.

தேசிய நெடுஞ்சாலையின் **19-**ஐ வாரணாசி சுற்றுச்சாலையுடன் இந்த திட்டம் இணைக்க உள்ளதாக அவர் கூறினார்.

இதன்மூலம், அந்த வழித்தடத்தில் பயண நேரம் வெகுவாக குறையும் என்றும் அமைச்சர தெரிவித்தார்.

ஒடிஷா மற்றும் ஜார்கண்டின் ரயில் மேம்பாட்டுப் பணிகளுக்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதன்படி, ஒடிஷாவில் **Paradeep — Haridaspur** இடையே இரட்டைவழிப்பாதை அமைப்பதற்கும், ஜார்கண்டில் **Rajkharsawan — Dangoaposi** இடையே நான்காவது வழித்தடமும் இந்த திட்டம் மூலம் ஏற்படுத்தப்பட உள்ளதாக அவர் கூறினார்.

**3** ஆயிரத்து தொள்ளாயிரத்து ஏழு கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த திட்டங்கள் அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் நிறைவடையும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

அறிவியல் ஆராய்ச்சியின் பலன்கள் விவசாயிகளிடம் நேரடியாக சென்றடைவதற்கு தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு

மேற்கொண்டு வருவதாக வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதுதொடர்பான இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் மாநாட்டில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

புதுமை கண்டுபிடிப்புகளும், நவீன இயந்திரங்களும் விவசாயிகளுக்கு பெரிதும் பயனளிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

உரங்கள் சம விகிதத்தில் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

மண் பாதுகாப்பிற்கு விவசாயிகள் கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>

இந்தியா — பெல்ஜியம் இடையேயான பேச்சுக்கள் இன்று **Brussels**-ல் நடைபெற்றன.

அரசு முறைப்பயணமாக பெல்ஜியம் சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் மற்றும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு **Maxime Prevot** இப்பேச்சுக்களில் பங்கேற்றனர்.

அரசியல், பொருளாதாரம், முதலீடு, தூய எரிசக்தி, பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இந்த பேச்சுக்களில் இடம்பெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

தில்லியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளின்கீழ், இறுதி வாக்காளர் பட்டியல் அக்டோபர் மாதம் **19-**ஆம் தேதி வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வரைவு வாக்காளர் பட்டியல் அடுத்த மாதம் **5-**ஆம் தேதிக்கு பதிலாக, **17-**ஆம் தேதி வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வீடு, வீடாக சென்று விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் பணி அடுத்த மாதம் **8-**ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

கர்நாடகாவில் பெங்களூரு பெருநகர ஒருங்கிணைந்த நகரியம் திட்டத்திற்காக விவசாயிகளிடமிருந்து வலுக்கட்டாயமாக நிலம்

கையப்படுத்தப்பட மாட்டாது என்று முதலமைச்சர் திரு **D K** சிவகுமார் கூறியுள்ளார்.

பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த திட்டத்திற்கு நிலம் கொடுக்க விரும்பாத விவசாயிகள் அப்பகுதிகளில் தொடர்ந்து வேளாண் பணிகளை மேற்கொள்ளலாம் என்று தெளிவுபடுத்தினார்.

இதுகுறித்து ஆய்வு செய்வதற்காக குழு ஒன்று அமைக்கப்படும் என்றும், அதன் பரிந்துரையின் அடிப்படையில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு திரு **D K** சிவகுமார் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

மணிப்பூரில் அரசு நியமனங்களில் வெளிப்படைத் தன்மை உறுதிசெய்யப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு **Yumnam Khemchand Singh** கூறியுள்ளார்.

மணிப்பூர் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்பட்ட தேர்வில் வெற்றிபெற்றவர்களுக்கு இன்று இம்பாலில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வதில் அதிகாரிகள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

குஜராத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சூரத்தின் நிவாரணப் பணிகளுக்காக **550** கோடி ரூபாய் மதிப்பிலான தொகுப்புத் திட்டத்திற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

காந்திநகரில் முதலமைச்சர் திரு புபேந்திர பட்டேல் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த துணை முதலமைச்சர் திரு ஹர்ஷ் சங்வி, வெள்ள பாதிப்பு குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கடைகளுக்கு நிதியுதவி வழங்கப்படும் என்று கூறிய துணை முதலமைச்சர், அதுகுறித்த விவரங்களையும் வெளியிட்டார்.

<<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் அமர்நாத் யாத்திரைக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மத்திய தொழிலக பாதுகாப்புப் படையின் தலைமை இயக்குநர் திரு **Praveer Ranjan** இன்று ஆய்வு மேற்கொண்டார்.

அமர்நாத் யாத்திரைக்கான வழித்தடத்தில் ஆய்வு மேற்கொண்ட அவர், அதிகாரிகள் பங்கேற்ற உயர்நிலைக் கூட்டத்திலும் கலந்துகொண்டார்.

யாத்ரிகர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும், மருத்துவ வசதிகள் குறித்தும், பாதுகாப்புப்படையின் ஒருங்கிணைப்பு குறித்தும் திரு **Praveer Ranjan** விரிவாக ஆய்வு மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

**Budapest** சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Aman** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் **57** கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **11-0** என்ற புள்ளிக்கணக்கில், அஜர்பைஜானின் **Islam Bazarganov**-ஐ வென்றார்.

-----------

**18** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கூடைப்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

பாங்காக்கில் இன்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா **79-46** என்ற புள்ளிக்கணக்கில் இந்தோனேஷியாவை வென்றது.

-----------------

இலங்கைக்கு எதிரான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

**Galle**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மூன்றாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் இந்தியா முதல் இன்னிங்சில் **3** விக்கெட் இழப்பிற்கு **378** ரன் எடுத்துள்ளது.

**Lakshaya Raichandani** அபாரமாக ஆடி சதம் அடித்து **196** ரன்னுடனும், **Kush Patel 3** ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

**Sagar Virk**-கும் சதம் அடித்து **134** ரன்னுக்கு ஆட்டமிழந்தார்.

-----------

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியா **2** தங்கம், **6** வெள்ளிப்பதக்கங்களை வென்றுள்ளது.

ஜகார்தாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் **51** கிலோ எடைப்பிரிவில் சந்திரிகா புஜாரியும், **57** கிலோ எடைப் பிரிவில் **Prachi**-யும் தங்கப்பதக்கம் வென்றனர்.

**48** கிலோ எடைப்பிரிவில் **Gunjan**-னும், **54** கிலோ எடைப்பிரிவில் **Joyshree Devi Chirom**-ம், **60** கிலோ எடைப்பிரிவில் **Chahat**-ம், **75** கிலோ எடைப்பிரிவில் **Anshika**-வும், **80** கிலோ எடைப்பிரிவில் **Megha Sheokhand**-வும், **80**-க்கும் கூடுதலான எடைப்பிரிவில் **Prachi Tokas**-ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

இப்போட்டியின் **23** வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் **Nisha** தங்கப்பதக்கத்தையும், **Nikita Chand, Kajal, Muskan** மற்றும் **Priyanka** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

--------------

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் சுப்மன் கில் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

**<<<<<<<END>>>>>**